நவம்பர் 11–17

# பாடம் 7

# பாவத்தை மேற்கொள்ளுதல்



கிரியைகளால் நம்மை இரட்சிக்கமுடியாதென்றால், கிரியைகளைக் குறித்துக் கவலைப்படவேண்டுமா? பாவத்தைச் செய்துகொண்டே இருக்கலாமே?

இந்த முக்கியக் கேள்விக்கு பவுலின் பதில்தான் ரோமர் 6ம் அதிகாரம். பாவத்தை நாம் மேற்கொள்ளவும், கிறிஸ்துவின் குணத்தை அதிகமதிகமாகப் பிரதிபலிக்கவும் நம் வாழ்க்கையில் நடைபெறவேண்டிய ‘பரிசுத்தமாகுதல்’ என்கிற செயல்பற்றி பவுல் இங்கு பேசுகிறார். ‘பரிசுத்தமாகுதல்’ என்பதற்கான **ஹகியஸ்மோஸ்** என்கிற கிரேக்க வார்த்தை ரோமரில் இரண்டே இடங்களில்தான் வருகிறது. ரோமர் 6:19: ரோமர் 6:22. ‘பரிசுத்தம்’ ‘பரிசுத்தமாகுதல்’ ஆகிய வார்த்தைகள் அங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டே இடங்களில் வருவதால் பரிசுத்தமாகுதல் பற்றி பவுல் அதிகம் பேசவிரும்பவில்லை என்று அர்த்தமா? இல்லவே இல்லை.

பரிசுத்தமாகுதல் என்றால் தேவனுக்கு ‘அர்ப்பணித்தல்’ ஆகும். பரிசுத்தமாக்கப்படுதல் என்பது நிறைவேற்றப்பட்ட ஒரு செயலாக சுட்டிக்காட்டப்படுகிறது. ‘பரிசுத்தமாக்கப்பட்ட அனைவரும்’ என்று அப் 20:32 சொல்கிறது. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்றால், தேவனுக்கு தங்களை அர்ப்பணித்தவர்கள் என்று அர்த்தமாகும்.

‘பரிசுத்தமாகுதல்’ பற்றி அதிகம் சொல்லப்படாததால், பரிசுத்தமாகுதலின் முக்கியத்துவத்தையோ, அது வாழ்க்கை முழுவதும் நடைபெறவேண்டிய செயல் என்பதையோ வேதாகமம் எவ்விதத்திலும் மறுக்கவில்லை. வேறு வார்த்தைகளின் உதவியால் பரிசுத்தமாகுதலை வேதாகமம் மிகவும் வலியுறுத்துகிறது.

விசுவாசத்தால் கிடைக்கும் இரட்சிப்பின் மற்றொரு அம்சமே பாவத்தின் மேலான வெற்றி. இரட்சிக்கப்பட்டவரின் வாழ்வில், பாவத்தின் மேலான வெற்றியின் வாக்குறுதிகள் நிறைவேறுவது குறித்து வாரம் ஆராய்வோம்.

2017, நவம்பர் 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

**மனன வசனம்**

**நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. ரோமர் 6:14.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 6; 1 யோவான் 1:8–2:1.**

நவம்பர் 11 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாவம் பெருகின இடத்தில்

'பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று' என்பது அர்த்தம் நிறைந்த ஒன்று. ரோமர் 5:20. எவ்வளவு பாவம் இருந்தாலும், பாவத்தின் விளைவுகள் எவ்வளவு கொடுமையானவைகளாக இருந்தாலும், பாவத்தைப் போக்குவதற்கு தேவ கிருபை போதுமானது. என்னுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட வாய்ப்பே இல்லை என்று நினைப்பவர்களுக்கு இதிலுள்ள நம்பிக்கை என்ன? பாவமானது மரணத்தைக் கொண்டுவந்தாலும், தேவ கிருபையானது இயேசுவின்மூலம் மரணத்தை வென்றது; அது நமக்கு நித்திய ஜீவனைத் தரவல்லது; இதையே ரோமர் 5:21இல் பவுல் வலியுறுத்துகிறார்.

***என்ன காரணத்திற்காக ரோமர் 6:1இல் பவுல் அவ்வாறு சொல்கிறார்? இப்படி நினைப்பவர்களுக்கு ரோமர் 6:2-11இல் பவுல் சொல்கிற பதில் என்ன?***

நீதிமானாக்கப்பட்ட ஒருவர் பாவம் செய்யமாட்டார் என்பதற்கான காரணத்தை ரோமர் 6இல் பவுல் கூறுகிறார். பாவத்திற்கு மரித்திருப்பவர்கள் பாவம் செய்யக்கூடாது. இதுபற்றி பவுல் விளக்கமாகக் கூறுகிறார்.

ஞானஸ்நானத்தின்போது தண்ணீரில் மூழ்குவது அடக்கத்திற்கு அடையாளமாகும். 'பழைய பாவ மனிதன்', அதாவது பாவம் அரசாளுகிற அல்லது பாவம் செய்கிற சரீரம் அடக்கம்செய்யப்படுகிறது. 'பாவ சரீரம்' அழிக்கப்படுவதால், அதன்பிறகு பாவத்திற்குச் சேவைசெய்யவேண்டிய அவசியம் இல்லை. தன் ஊழியக்காரர்கள்மேல் ஆதிக்கம்செலுத்துகிற ஒரு எஜமானுக்கு பாவம் ஒப்பிடப்படுகிறது. ரோமர் 6. பாவத்திற்குச் சேவைசெய்த 'பாவசரீரம்' அழிக்கப்படுவதால், பாவத்தின் ஆதிக்கமும் ஒழிகிறது. தண்ணீராகிய கல்லறையிலிருந்து எழும்புகிறவர், பாவத்திற்குச் சேவைசெய்யாத ஒரு புதிய மனிதனாக எழும்புகிறார். புதிய ஜீவனுள்ளவராக இப்போது நடக்கிறார்.

கிறிஸ்து ஒரேதரம் மரித்து, இப்போது உயிரோடிக்கிறார். அதுபோல, ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவரும் ஒரேதரம் பாவத்திற்கு மரித்திருக்கிறார்; இனி அதன் ஆதிக்கத்திற்கு அவர் ஆளாகவேண்டியதில்லை. தண்ணீரிலிருந்து வெளியே வந்ததும் பாவமானது தானாகவே வாழ்க்கையிலிருந்து விலகி ஓடிவிடுவதில்லை. இனி பாவத்தின் ஆதிக்கம் இருக்காது என்பதால், பாவத்தோடான போராட்டம் இருக்காது என்று அர்த்தமல்ல.

"அப்போஸ்தலர் சொல்வதின் அர்த்தத்தை இங்கு நாம் தெளிவாக காணமுடிகிறது. பாவம் தொடர்ந்து நம்மில் காணப்பட்டாலும், பாவத்திற்கும் அதன் இச்சைகளுக்கும் நாம் ஆளாகவேண்டியதில்லை என்பதை

**1. 'பாவத்திற்கு மரித்தவர்கள்'  2. 'தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்கள்'**

போன்றவை வலியுறுத்துகின்றன. ஆனாலும், கலா 5:17இல் நாம் வாசிப்பதுபோல, நாம் உயிரோடு இருக்கிறவரை பாவம் நம்மில் காணப்படுகிறது: மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவை ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.' எனவே, நம் சரீரம் சாம்பலாகி, பாவமும் பாவ ஆசையும் இல்லாத ஒரு புதிய (மகிமைப்படுத்தப்பட்ட) சரீரத் தோடு எழுப்பப்படும்வரை பாவமும் பாவ ஆசையும் நமக்குள் காணப்படும் என்பதை சகல பரிசுத்தவான்களும் கூறுகிறார்கள்." – *Martin Luther, Commentary on Romans, p. 100.*

***ரோமர் 6:12இல் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்பு என்ன?***

ஆளுகை என்கிற வார்த்தை ‘பாவத்தை’ ஒரு இராஜாவாகச் சித்தரிக்கிறது. ஆளுகை என்று இங்கு வரும் கிரேக்க வார்த்தைக்கு ‘ஒரு ராஜாவாக இருப்பதற்கு’, ‘ஒரு ராஜாவாகச் செயல்படுவதற்கு’ என்று அர்த்தம். அழிவுக்கேதுவான நம் சரீரங்களில் ராஜாவாக ஆளுகைசெய்யவும், நம் நடத்தையைக் கட்டுப்படுத்தவும் பாவம் எப்போதுமே ஆயத்தமாக இருக்கிறது.

‘பாவம் ஆளாதிருப்பதாக’ என்று பவுல் சொல்கிறார்; எனவே, நீதிமானாக்கப்பட்ட ஒருவர் பாவம் தன்னுடைய வாழ்க்கையில் ராஜாவாகிவிடாதபடிக்குத் தீர்மானிப்பார். இங்குதான் தேர்ந்தெடுக்கும் உரிமை முக்கியமாகிறது.

‘சித்தத்தின் மெய்யான வலிமையை நீங்கள் புரிந்துக்கொள்ள வேண்டியது முக்கியம். மனித இயல்பைக் கட்டுப்படுத்துகிற வல்லமை இதுதான். தீர்மானிக்கும் உரிமையையும் இதுதான் கட்டுப்படுத்துகிறது. சித்தம் சரியாகச் செயல்படுவதைச் சார்ந்துதான் எல்லாம் இருக்கிறது. தீர்மானிக்கும் உரிமையை மனிதர்களுக்குத் கொடுத்திருக்கிறார் தேவன். அதனை உபயோகிக்கவேண்டியது அவர்களுடையது. நீங்களாக உங்கள் இருதயத்தை மாற்றமுடியாது. தேவனிடம் நீங்களாகவே உங்கள் பாசத்தைக் காட்டமுடியாது. ஆனால், அவரைச் சேவிக்க முடிவுசெய்யலாம்; உங்கள் சித்தத்தை அவரிடம் கொடுக்கலாம். அப்பொழுது தமக்குப் பிரியமானபடி செய்யும் சித்தத்தையும் செய்கையையும் அவர் உங்களில் உண்டாக்குவார்; உங்கள் முழு இயல்பும் பரிசுத்தாவியின் கட்டுப்பாட்டுக்குள் வரும். உங்கள் ஆசைகள் அவரையே சுற்றிவரும். உங்களுடைய சித்தனைகள் அவரோடு இசைந்திருக்கும்.’ – *EGW, SC, p 47.*

‘இச்சைகள்’ என்பது ‘ஆசைகளை’ சுட்டிக்காட்டுகின்றன. ரோமர் 6:12. நல்ல ஆசைகளும் உள்ளன; தீய ஆசைகளும் உள்ளன; பாவம் ஆளும்போது, நாம் தீயவற்றை விரும்பும்படி அது செய்கிறது. நம் சொந்தப் பெலத்தில் அவற்றை எதிர்த்தால், அவை கட்டுக்கடங்காமல் செல்லும். பாவம் ஒரு கொடுங்கோலன்; அது திருப்தியடையாது; அதிகமாகக் கேட்கும். விசுவாசத்தாலும், வெற்றியின் வாக்குறுதிகளைப் பற்றிக்கொள்வதாலுமே நாம் வெற்றிபெறமுடியும்.

ரோமர் 6:12இல் ‘ஆகையால்’ என்பது அதற்குமுன் சொல்லப்பட்டவற்றைச் சுட்டிக்காட்டுகிறது; குறிப்பாக ரோமர் 6:10,11ஐக் குறிக்கிறது. ஞானஸ்நானம் எடுக்கிறவர் அதன்பிறகு தேவனுக்கென்று ‘பிழைத்திருக்கிறார்.’ அதாவது, தேவனே அவருடைய புதுவாழ்வின் மையமாகிறார். தேவனைச் சேவித்து, தேவனுக்குப் பிரியமானதைச் செய்வதால், பாவத்திற்குச் சேவைசெய்ய முடியாது. ‘கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவராகிறார்.’

தேர்ந்தெடுக்கும் உரிமையின் முக்கியத்துவத்தை எலன் ஒய்ட்டின் மேற்கோளிலிருந்து படித்தோம். நாம் ஒழுக்க ஜீவிகள்; நன்மை–தீமை, சரி–தவறு, கிறிஸ்து–உலகம் இவற்றில் சரியானதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை நமக்கு உள்ளது. உங்கள் ஒழுக்கச் சித்தத்தை அடுத்த 24 மணி நேரத்திற்கு எவ்வாறெல்லாம் பயன்படுத்திகிறீர்களெனக் கவனியுங்கள். இந்த அற்புத ஈவை எவ்வாறெல்லாம் சரியாக அல்லது தவறாகப் பயன்படுத்தமுடியும்?

செவ்வாய்
நவம்பர் 14

## நியாயப்பிரமாணத்திற்கு அல்ல, கிருபைக்குக் கீழ்ப்படுதல்

*ரோமர் 6:14 என்ன சொல்கிறது? பத்துக் கற்பனைகளுக்கு இனி நாம் கட்டுப்படவேண்டியதில்லை என்று சொல்கிறதா? அப்படிச் சொல்லவில்லை என்றால், காரணம் கூறுங்கள்.*

---

ரோமர் புத்தகத்தின் மிகமுக்கியமான வாக்கியங்கள் ரோமர் 6:14இல் உள்ளன. ஏழாம் நாள் ஓய்வுநாள் ஒழிந்துவிட்டது என்று அட்வென்ட்டிஸ்டுகளிடம் வாக்குவாதம் செய்ய, இந்த வசனமே பெரும்பாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால், இந்த வசனம் அப்படிச் சொல்லவே இல்லை. ஒழுக்கப்பிரமாணம் ஒழிந்திருக்குமானால், பாவம் என்கிற ஒன்று எவ்வாறு இருக்கமுடியும்? பாவம் என்னவென்று ஒழுக்கப்பிரமாணம்தான் அடையாளங்காட்டுகிறது! ரோமர் 6 இலும், அதற்கு முந்தின அதிகாரங்களிலும் பாவத்தின் நிஜத்தைப்பற்றிதான் பவுல் தொடர்ந்து பேசிவருகிறார்; திடீரென, 'பாவத்தை அடையாளங்காட்டும் பத்துக் கற்பனைகளாகிய ஒழுக்கப்பிரமாணம் ஒழிந்துவிட்டது' என்று அவர் சொல்வாரா? அதற்கு வாய்ப்பே இல்லை.

'நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக' வாழ்கிறவர், அதாவது மனிதர்கள் இயற்றிய சட்டத்திட்டங்களும் அடங்கிய யூத ஒழுங்கின்கீழ் வாழ்கிறவர் பாவத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பாரென பவுல் கூறுகிறார். மாறாக, கிருபையின்கீழ் வாழ்கிறவர் பாவத்தின்மேல் வெற்றிபெற்றிருப்பார்; ஏனென்றால், தேவனுடைய பிரமாணம் அவருடைய இருதயத்தில் எழுதப்பட்டிருக்கும்; தேவ ஆவியானவர் தன்னை வழிநடத்த அவர் அனுமதித்திருப்பார். இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்தல், அவரால் நீதிமான்களாக்கப்படுதல், அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுதல், 'பழைய மனிதன்' மரித்து, புதிய ஜீவனுள்ளவர்களாக வாழ எழுந்திருத்தல் போன்றவையே பாவத்தின் ஆளுகையை நம் வாழ்க்கையிலிருந்து அகற்றமுடியும். பாவத்தின்மேல் நமக்கு வெற்றி வாக்களிக்கப்பட்டுள்ளதை வலியுறுத்துவதே ரோமர் 6:14இன் நோக்கம்.

அதற்காக 'நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பது' அவசியமே இல்லையெனச் சொல்லமுடியாது. 'கிருபையின்கீழ்' வாழ்வதாகச் சொல்லிக்கொண்டு, தேவ பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவர் கிருபையை அல்ல, ஆக்கினையையே அடைவார். பாவிகள்மேல் நியாயப்பிரமாணம் சுமத்துகிற ஆக்கினையை இயேசுவில் வெளிப்பட்ட தேவ கிருபை போக்குவதையே 'கிருபையின்கீழ்' என்பது சுட்டிக்காட்டுகிறது. எனவே, நியாயப்பிரமாணத்தால் சுமத்தப்பட்ட மரண ஆக்கினையிலிருந்து விடுபட்டவர்கள் 'புதிதான ஜீவனுள்ளவர்களாய்' நடந்துகொள்ளுகிறார்கள். இவர்கள் இனியும் பாவத்திற்கு அடிமைகளாயிராமல் சுயத்திற்கு மரித்திருப்பது அவர்களுடைய வாழ்க்கையில் வெளிப்படும்.

---

கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கையை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா? கிறிஸ்து உங்களுக்குள் உண்டாக்கியிருக்கும் மாற்றத்திற்கு வெளிப்படையாக உங்களில் தெரிகிற ஆதாரம் என்ன? உங்கள் வாழ்க்கையில் என்னென்ன விஷயங்களை விடமுடியாமல் அவதிப்படுகிறீர்கள்? அவற்றை ஏன் நீங்கள் அகற்றியே ஆகவேண்டும்?

***ரோமர் 6:16இல் பவுல் வலியுறுத்தும் கருத்து என்ன? சுற்றிவளைக்காமல் ஏன் நேரடியாகவே விஷயத்தைப் பேசுகிறார்? ஏதாவது ஒரு பக்கத்தில் இருந்தாகவேண்டும்; நடுநிலைக்கே இதில் இடமில்லை. இதில் நமக்குள்ள பாடம் என்ன?***

புதிய விசுவாச வாழ்க்கையானது நாம் பாவம்செய்வதற்கு எந்த உரிமையையும் தருவதில்லை என்று மீண்டும் பவுல் வலியுறுத்துகிறார். விசுவாச வாழ்க்கையே பாவத்தின் மேலான வெற்றியைச் சாத்தியமாக்குகிறது; நமக்கு வாக்களிப்பட்டுள்ள வெற்றியை விசுவாசத்தால்மட்டுமே பெறமுடியும்.

முன்பு பாவத்தை ஒரு ராஜாவாக உருவகப்படுத்தினார்; இப்போது அடிமைகளை அடக்கி ஆளுகிற ஒரு எஜமானாக அதை உருவகப்படுத்துகிறார். யாரை தன் எஜமானாக்குவது என்பதைத் தீர்மானிக்கிற சுதந்தரம் நமக்கு இருக்கிறது. நாம் பாவத்தைச் சேவித்தால், அது மரணத்திற்கு வழிநடத்தும்; நாம் நீதியைச் சேவித்தால், அது நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும். இதில் நடுநிலைக்கோ, சமரசத்திற்கோ இடமில்லை. ஏதாவது ஒன்றை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்; இறுதியில் நித்தியஜீவன் அல்லது நித்திய மரணத்தை அடைந்தாகவேண்டும்.

***ரோமர் 6:16இல், தான் சொல்வதை ரோமர் 6:17இல் எவ்வாறு பவுல் விளக்கிக்கூறுகிறார்?***

சரியான உபதேசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் இருக்கிற தொடர்பை அவர் காட்டுகிறார். 'உபதேசம்' என்று இங்கு வருகிற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தைக்கு 'போதனை' என்று அர்த்தமாம். ரோமக் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தின் நியதிகள் போதிக்கப்பட்டன; அவற்றிற்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்கள். சரியான உபதேசத்திற்கு, சரியான போதனைக்கு 'மனப்பூர்வமாகக்' கீழ்ப்படிந்தது, அவர்கள் 'நீதிக்கு அடிமைகளாக' மாறுவதற்கு உதவியது. ரோமர் 6:18. அன்புகாட்டினால் போதும், உபதேசமெல்லாம் அவசியம் இல்லையெனச் சொல்கிறார்கள். இது முக்கியமான ஒன்றை முக்கியமே இல்லாததாகச் சுட்டிக்காட்டுவதாகும். கலாத்தியாச் சபையினர் பொய்ப்போதனைகளால் தடம்புரண்டதைக் கண்டு பவுல் வேதனையடைந்ததைத்தான் முந்தின பாடம் ஒன்றில் படித்தோம். எனவே, சரியான போதனையின் முக்கியத்துவத்தைக் கெடுக்கிற எந்தப் பேச்சையும் பேசாமலிருப்பது அவசியம்.

பாவத்திற்கு அடிமைகள், நீதிக்கு அடிமைகள் என்று ஒன்றுக்கொன்று நேர் எதிரான விஷயம் சொல்லப்படுகிறது. ஞானஸ்நானம்பெற்ற பிறகும் நாம் பாவம்செய்தால், நாம் உண்மையில் இரட்சிக்கப்படவில்லை என்று அர்த்தமா? 1யோவான் 1:8–2:1 வசனங்களை வாசியுங்கள். கிறிஸ்துவின் சீடராக இருக்கிற ஒருவர்கூட பாவம்செய்யவும் வாய்ப்பிருக்கிறது என்பதுபற்றி இந்த வசனங்கள் சொல்வது என்ன?

## பாவத்திலிருந்து விடுதலை

***ரோமர் 6இல் இதுவரையிலும் நாம் படித்தவற்றை மனதில் வைத்து, ரோமர் 6:19-23 வசனங்களை வாசியுங்கள். பவுல் சொல்வதை இரத்தினச் சுருக்கமாக எழுதுங்கள். பவுல் சொல்கிற மிகமுக்கிய சத்தியங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எவ்வாறு நிஜமாக்கலாம்? என்னென்ன விஷயங்கள் இங்குக் கேள்விக்குள்ளாகின்றன?***

---

---

---

மனிதஇனத்திற்கு விழுந்துபோன இயல்பு இருக்கிறதென்பதை பவுல் முற்றிலும் உணர்ந்திருந்தார். 'மாம்ச பலவீனம்' என்று அதைக் குறிப்பிடுகிறார். எந்த உதவியுமின்றி விடப்பட்டால், மனிதனின் விழுந்துபோன இயல்பு என்ன நிலைக்கு ஆளாகுமென்பது அவருக்குத் தெரியும். அதனால்தான் தேர்ந்தெடுக்கும் உரிமையை வலியுறுத்துகிறார். நம்மையும் பலவீனமான நம் மாம்சத்தையும் புதிய எஜமானான இயேசுவிடம் அர்ப்பணிக்க வேண்டுமென்று நாம் தீர்மானிக்கவேண்டும்; ஒரு நீதியான வாழ்க்கை வாழ, அவர் திறனளிப்பார்.

நியாயப்பிரமாணத்தை மீறுவதாகிய பாவத்தின் சம்பளம் மரணம் என்பதைச் சுட்டிக்காட்ட ரோமர் 6:23ஐ மேற்கோள் காட்டுகிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது உண்மைதான். பாவம்பற்றி ரோமர் 6இல் பவுல் கொடுக்கிற விளக்கத்தையும் கவனிக்கவேண்டும். அதாவது, தன் அடிமைகளை வேலை வாங்குகிற எஜமான்போல பாவம் செயல்படுகிறது; மரணத்திற்கேதுவான விளைவுகளை அது சம்பளமாகக் கொடுக்கிறது.

இரண்டு எஜமான்களைப் பற்றிச் சொல்லும் பவுல், ஒரு எஜமானுக்குச் சேவை செய்யத் தீர்மானித்துவிட்டால், இன்னொரு எஜமானிடமிருந்து விடுதலைபெற்று விடலாம் என்பதையும் வலியுறுத்துகிறார். மீண்டும், இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தாகவேண்டும். நடுநிலைக்கே வாய்ப்பில்லை. அதேநேரம், பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுதலைபெறுவதால் நாம் பாவமே இல்லாதவர்களாக மாறிவிடுவதில்லை; பாவப்போராட்டத்திலிருந்து விடுபடுவதில்லை; அவ்வப்போது விழவேண்டிய சூழ்நிலைகளும் உண்டாகாமல் இருப்பதில்லை. மாறாக, பாவம் எவ்வளவுதான் நம் வாழ்க்கையில் நம்மைச் சோதித்தாலும், எவ்வளவுதான் அனுதினமும் பாவத்தை மேற்கொள்ளுவதற்கான வாக்குறுதிகளை நாம் உரிமைகோர வேண்டியதிருந்தாலும், பாவத்தின் ஆளுகை அதன்பிறகு நம்மில் காணப்படாது.

பாவத்தைச் சேவித்துக்கொண்டிருக்கும் அனைவரையும் திரும்பிப்பார்க்க வைக்கும் வசனம் இது. அவமான செயல்களைச் செய்யவைத்து, மரணத்தையே இந்தக் கொடுங்கோலன் சம்பளமாகத் தருகிறான். ஆனால், நீதியைச் செய்கிறவர்கள் நீதியானவற்றைச் செய்வார்கள்; இரட்சிப்பைப் பெறுவதற்காக அப்படிச் செய்யமாட்டார்கள்; அவர்களின் புதிய அனுபவம் அவ்வாறு செய்யவைக்கும். இரட்சிப்பைச் சம்பாதிக்கும் நோக்கத்துடன் அப்படிச் செய்வார்களானால், சுவிசேஷத்தின் முழுக்கருத்தையும், இரட்சிப்பின் முழுக்கருத்தையும், தங்களுக்கு ஏன் இயேசு தேவை என்பதின் முழுக் கருத்தையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

## மேலும் படிக்க:

**வெள்ளி**
**நவம்பர் 17**

"இயேசு பாவஞ்செய்ய இணங்கவில்லை. அவர் தம் சிந்தையிலும் பாவச்சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை. அப்படியே நாமும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் மனித தன்மை தெய்வீக தன்மையோடு ஐக்கியமாயிருந்தது; பரிசுத்த ஆவியானவர் அவருக்குள் வாசம் செய்தது, போராட்டத்திற்கு அவரைத் தகுதிப்படுத்தியது. தெய்வீக சுபாவத்தில் நம்மையும் பங்குபெறச் செய்யவே அவர் வந்தார். விசுவாசத்தோடு நாம் அவரோடு ஐக்கியமாக இருக்கும் வரையிலும் பாவம் நம்மை ஆளுகைசெய்யமுடியாது. நம்முடைய விசுவாசக் கரத்தை தேவன் பிடித்து, நம்முடைய குணம் பூரணப்படும்படி கிறிஸ்துவின் தெய்வீக தன்மையை நாம் இறுகப் பற்றும்படிச் செய்கிறார்." – *EGW, DA, p.123.*

"ஞானஸ்நானத்தின்போது, சாத்தானோடும் அவனுடைய ஏதுகரங்களோடும் உள்ள சகல தொடர்புகளையும் விட்டுவிடவும், தேவ ராஜ்யத்தைப் பரப்பும் பணியில் நம் இருதயத்தை யும் சிந்தையையும், ஆத்துமாவையும் ஈடுபடுத்தவும் நாம் உறுதிமொழி எடுக்கிறோம். பரிசுத்த மாக்கப்பட்ட மனித கருவிகளுடன் ஒத்துழைப்பதற்கு பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியும் உறுதிமொழி கொடுக்கிறார்கள்." – *EGW, 6SDABC, p 1075.*

"விசுவாசத்தை நம் கிரியைகளில் வெளிப்படுத்தாமல் வெறுமனே கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்வதில் பயனில்லை. இரண்டு எஜமான்களுக்கு ஒருவராலும் சேவை செய்ய முடியாது. துன்மார்க்க புத்திரர் தங்கள் எஜமான்களின் அடிமைகளாக இருக்கிறார்கள்; அவனுக்குக் கீழ்ப்படிகிற அடிமைகளாக தங்களைக் கீழ்ப்படுத்துகிறார்கள்; பிசாசையும் அவனு டைய சகல கிரியைகளையும் புறக்கணிக்காதவரையிலும் அவர்கள் தேவனுடைய அடிமைகளாக மாறமுடியாது. சாத்தானுடைய அடிமைகள் தங்களுக்கு எந்தப் பாதிப்பும் உண்டாவதில்லை என்றுசொல்லிக்கொண்டே ஈடுபடுகிற இன்பங்களிலும் கேளிக்கைகளிலும் பரலோகராஜாவின் பிள்ளைகளும் ஈடுபட்டால், பாதிப்பு உண்டாகாமல் இருப்பதில்லை. பக்தியற்றோரிடமிருந்து தம் பிள்ளைகளைப் பிரித்துக்காட்டுகிற, தமக்காக அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிற தூய்மை யும் பரிசுத்தமுமான சத்தியங்களை தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். செவந்த்–டே அட்வென்ட் டிஸ்டுகள் தங்கள் விசுவாசத்திற்கு உண்மையாக வாழவேண்டும்." – *EGW, 1T, p 404.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *பாவத்தை மேற்கொள்வதற்கு அற்புதமான இந்த வாக்குத்தத்தங்கள் கொடுக் கப்பட்டிருந்தாலும், நம் விழுந்துபோன இயல்பையும், நம் பாவத்தன்மை யையும், நம் இருதயங்களின் திருக்கையும் நாம் எல்லாருமே, ஏன் மறுபடி யும் பிறந்த கிறிஸ்தவர்களும் அறிவோம்? இதில் சந்தேகம் உண்டா?*

2. *கிறிஸ்து உங்களில் எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்? எப்படிப்பட்ட புதிய வாழ்க்கையைத் தந்திருக்கிறார்?*

3. *கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றாலேயே நமக்கு இரட்சிப்பு கிடைத்திருக் கிறது உண்மைதான்; ஆனால், தம்முடைய சாயலுக்கு நம்மை மாற்ற, அவர் விரும்புவதும் இன்னொரு காரணம்; இந்த உண்மையை மறந்தால் என்ன ஆபத்துகள் உண்டாகலாம்? இந்த இரண்டு விஷயங்களையும் நாம் மனதில் வைத்திருப்பது ஏன் மிகவும் அவசியமானது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*